**மாதிரி வினாத்தாள்**

தாவரங்களில் இனப்பெருக்கம் - பகுதி II

10th Standard

**அறிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:15:00 Hrs

Total Marks : 45

## பகுதி - அ

6 x 1 = 6

1) கீழுள்ள கூற்றுகளில், தவறானது ....................

(a) இருவித்திலைத் தாவர விதையில் காணப்படும் குட்டையான, செங்குத்தான, வெண்மையான பகுதிக்கு ரஃபே என்று பெயர்

(b) இருவித்திலைத் தாவர விதையில் காணப்படும் மிக நுண்ணிய துளைக்கு மைக்ரோபைல் என்று பெயர்

(c) கருவில் தண்டு உருவாகும் பகுதிக்கு முளைவேர் என்று பெயர் (d) கருவில் வேர் உருவாகும் பகுதிக்கு முளைவேர் என்று பெயர்

2) கீழுள்ள கூற்றுகளில், காற்றின் மூலம் கனி, விதை பரவுதலுக்கான பொருத்தமான கூற்று ..................

(a) கனிகள், விதைகள் திடிரென்று வெடித்து பரவுகின்றன.

(b) டிரைடாக்ஸ் தாவரத்தில், புல்லி வட்டம், பாப்பஸ் தூவிகளாக மாறிக் கனி பரவுதலுக்கு உதவுகிறது.

(c) சாந்தியம் தாவரங்களில் கனிகள் கூரிய முட்கள் மூலம் பரவுகின்றன. (d) தென்னையின் கனி நடுத்தொல் நார் போன்று உள்ளது.

3) மூவிணைவினால் உண்டாகும் திசு.கருவின் வளர்ச்சிக்கு ஊட்டம் அளிக்கவல்லது ............................

(a) சைகோட் (b) சூல் ஒட்டுத் திசு (c) ஸ்கூட்டெல்லம் (d) கருவூண்

4) தன் மகரந்தச் சேர்க்கை முறையின் தீமை ....................

(a) மகரந்தத்தூள்கள் வீணாவதில்லை (b) விதைகள் குறைந்த எண்ணிக்கையில் உண்டாகின்றன

(c) இருபால் மலர்களில் கட்டாயமாக நடைபெறுகிறது

(d) மலர்களின் மகரந்தச் சேர்க்கைக்கு வெளிக்காரணிகளைச் சார்ந்திருக்கத் தேவை இல்லை

5) மலர் தாவரத்தின் முக்கிய பகுதி இது ................................ க்கு உதவுகிறது.

(a) கவர்தல் (b) தேன் சுரத்தல் (c) மகரந்தச் சேர்க்கை (d) பால் இனப்பெருக்கம்

6) மலரின் இன்றியமையாத பாகங்கள் ...................

(a) புல்லிவட்டம் , அல்லிவட்டம் (b) மகரந்ததாள் வட்டம், சூலக வட்டம் (c) புல்லிவட்டம், மகரந்ததாள் வட்டம்

(d) அல்லிவட்டம், சூலக வட்டம்.

## பகுதி - ஆ

5 x 2 = 10

7) கீழ்க்காணும் அ) மற்றும் ஆ) நிகழ்வுகளுக்குப் பெயரிட்டு இந்நிகழ்வுகளின் முடிவில் உருவாகும் அமைப்புகளின் படிநிலையைக் குறிப்பிடு.

அ) ஆண் கேமீட் (n) + அண்டம் (n) = சைகோட் (2n)

ஆ) ஆண் கேமீட் (n)+ இரண்டாம் நிலை உட்கரு (2n ) = கருவூண் உட்கரு (3n).

8) தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் உலர் வெடிகனிகளை உலர் வெடியாகக் கனிகளிலிருந்து வேறுபடுத்துக.

9) ஒரு வித்தலை, இரு வித்தலைத் தாவரங்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுகள் தருக.

10) கீழ்க்காணும் கனி/ விதை பரவும் முறைகளுக்குத் தகுந்த சொற்றொடர் தருக.

ஒவ்வொன்றிக்கும் ஓர் எடுத்துக்காட்டு தருக.

அ) காற்றில் பரவுதல் -

ஆ) நீரில் பரவுதல் -

இ) விலங்குகளால் பரவுதல் -

11) கீழ்காணும் கனி/ விதை பரவும் முறைகளுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

அ) பறவைகளின் கழிவுகள் மூலம் -


ஆ) மனிதன் மூலம் -

## பகுதி - இ

5 x 5 = 25

12) ஒருவித்திலைத் தாவர விதையின் அமைப்பை விவரிக்க.

13) கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தை உற்றுநோக்குக.





அ)படத்தை வரைந்து பாகங்களைக் குறிக்க.

ஆ)கருவுறுதலுக்குப் பின் E,F தாவரத்தின் எந்தப் பாகமாக மாறுகின்றன?

QUESTION BANK 365 https://www.qb365.in

14) கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தை உற்றுநோக்குக.
பின்வருவனவற்றிற்கு விடையளிக்க:-



அ)இங்கு காண்கின்ற இனப்பெருக்கமுறையைப் பெயரிடுக.
ஆ)எந்த உயிரியல் இந்தவகையான இனப்பெருக்கமுறை காணப்படுகிறது?
இ)இந்த இனப்பெருக்கமுறை உயிரிகளில் வேறுபாடுகளை உருவாக்குகின்றதா?

15) கீழே கொடுக்கப்பட்டுள்ள தாவரங்கள் உங்கள் தோட்டத்தில் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்க.
தேனீக்கள் தோட்டத்தை நாடிவருகின்றன. ஆனால், தேனீக்கள் எல்லா மலர்களையும் நாடிச் செல்கின்றனவா?
தேனீக்கள் எந்தெந்த மலர்களை நாடிச் செல்கின்றன? உங்கள் விடைகளுக்குத் தகுந்த காரணங்களைத் தருக. (மல்லிகை, அரளி, கொன்றை, ரோஜா, தாமரை, சோளம், கரும்பு, மூங்கில், சாமந்தி, டேலியா, புல், தென்னை,பட்டாணி)

16) ஒரு விவசாயி A,B என்ற இரண்டு வயல்கள் வைத்துள்ளார். அந்த இரண்டு வயல்களிலும் பட்டாணி (பைசம் சட்டைவம்) விதைத்துள்ளார். வயல் A பறவைகளும், பூச்சிகளும் நெருங்காமல் இருக்க, வலைகளால் மூடப்பட்டுள்ளது. வயல் B வலைகளால் மூடப்படாமல் உள்ளது.
அ)வயல் A மற்றும் வயல் B களில் எந்தவகையான மகரந்தச் சேர்க்கை நடைபெறும்?
ஆ)எந்த வயல் அதிக மகசூலைத் தரும்?
இ)அடுத்த முறை பயிர் செய்து விளைச்சலை உயர்த்துவதற்கு விவசாயி எந்த வயலின் விதைகளைத் தேர்ந்தெடுப்பார்? உங்கள் விடைக்குக் காரணம் தருக.

******************************************

QB 365 QUESTION BANK 365 https://www.qb365.in